வரு.73 இல. 04 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2021 ஜனவரி 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை — January 24 Sunday, 2021

32 பக்கங்கள் 40/-

## உள்ளே...




## கடற்படை கப்பலில் மோதுண்டு பலியான 4 தமிழக மீனவர்களின்

# சடலங்கள் ஒப்படைப்பு



இலங்கை – இந்திய கடல் எல்லையில் கரையோர காவல் படையினரிடம் கையள




சர்வதேச கடல் எல்லையில் நேற் ...டைக்கப்பட்டன.

...மிழக மீனவர்களின் சடலம் தொடர் ... நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கை ...டந்ததும் யாழ்ப்பாணம் ...தியசாலையில்

04

# புதனன்று வருகி... கொரோனா தடுப்பூசி

## முதற்கட்டமாக ஆறு இலட்சம் டோஸ் - ஜனாதிபதி



இந்தியாவிலிருந்து 6,00,000 ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனெகா (OxfordAstra Zeneca )கொரோனா தடுப்பூசிகளை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை 6,00,000 டோஸ் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஒக்ஸ்போர்ட்ஆஸ்ட்ரா செனெகா (Oxford Astra Zeneca) தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்கு பயன்படுத்த இலங்கை அரசாங்கம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

04

# நெருங்கும் ...ாற்றாளர்




உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 09 கோடி 87 இலட்சத்து 36 ஆயிரத்து 967 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா பாதிப்பிலிருந்து இதுவரை 07 கோடி 09 இலட்சத்து 11 ஆயிரத்து 582 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்கலுக்கு இது வரை 21 இலட்சத்து 16 ஆயிரத்து 159 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட 02 கோடி 57 இலட்சத்து 09 ஆயிரத்து 254 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், 01 இலட்சத்து 11 ஆயிரத்து 239 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

கொரோனா பாதிப்பு அதிகமுள்ள

04

## சவால் விடும் சுதேச வைத்தியர் சம்பத்



கொரோனா வைரஸை முற்றிலுமாக அடக்கும் ஒரு சுதேச மருந்தை உருவாக்கியுள்ளதாக சுதேச மருத்துவர் ஒருவரான கலுதரேஜ் சம்பத் பெர்னாண்டோ என்பவர் தெரிவித்துள்ளார்.

பண்டைய மருத்துவ பரிந்துரைகளின்படி தயாரிக்கப்படும் சுமார் 24 வகையான ஔடதங்கள் இதில் உள்ளன என்றும் அவர் கூறினார்.

04

## மறைந்த எட்வினுக்கு பூரண அரசமரியாதை

### பிரதமர் மஹிந்த அறிவுறுத்தல்



இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளரும், திரைப்பட விமர்சகரும், ஊடகவியலாளரும், சுற்றுச் சூழல் ஆர்வலரும், ஆசிரியருமான கலாநிதி எட்வின் ஆரியதாசவின் இறுதி கிரியைகளை அரச அனுசரணையுடன் முன்னெடுப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (23) ஆலோசனை வழங்கியுள்ளார்.

வெகுஜன தொடர்பாடல் மற்றும் வெகுஜன ஊடகதுறையில் விரிவான

04

# தடுப்பூசி ஏற்றல்;அடுத்தவாரம் பரீட்சார்த்த நடவடிக்கைகள்

## டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

சுப்பிரமணியம் நிஷாந்தன்



கொவிட் 19 வைரஸுக்கான தடுப்பூசியை மக்களுக்குச் செலுத்துவதற்கு முன்னர் பரீட்சார்த்த நடவடிக்கைகள் எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ளதாக பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 வைரஸுக்கு எதிராக ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியை இலங்கையில் அவசரகால பயன்பாட்டிற்கு பயன்படுத்த தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

பெப்ரவரி நடுப்பகுதியில் இந்த தடுப்பூசி இலங்கை மக்களுக்கு கிடைக்கப் பெறுமென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்திருந்தார். அத்துடன், ஆரம்பகட்டமாக இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதமான மக்களுக்கு கொவிட்19 தடுப்பூசி கிடைக்கப் பெறுமெனவும் மேலதிகமாக 30 சதவீத தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படுமெனவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே தடுப்பூசி பரீட்சார்த்த நடவடிக்கை எதிர்வரும் வாரம்முதல் நடைபெறவுள்ளதாக பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தெரிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு கொவிட்19 தடுப்பூசி செலுத்தப்பட்டு முதல் பரீட்சார்த்து

04

# கந்தரோடையில் மக்கள் குழப்பத்தில்



பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்.சுன்னாகம், கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோவில் புராதன தீர்த்தக்கேணி அதனை அண்டியுள்ள அரச மரம் தொடர்பில் இராணுவத்தினர் எனக்கூறியோர் விசாரித்ததால் அங்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ( 22) மாலை 5 மணியளவில் ஆலயத்துக்கு வந்த சிலர், பூசகரிடம் தம்மை காரைநகர் முகாமைச் சேர்ந்த படையினரென அறிமுகப்படுத்தினர்.

அந்த ஆலயத்துக்குச் சொந்தமான தீர்த்தக் கேணி அதனை அண்டியுள்ள அரச மரமுள்ள நிலப்பகுதி தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.

அந்தக் கேணி, அரச மரம் உள்ள நிலப்பகுதி

04

# தகனம் செய்யப்படுவது குறித்து கவலைப்படும் UK அமைச்சர் அஹமட்



இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக மரணிக்கும் சடலங்களை கட்டாயமாக தகனம் செய்யும் நடைமுறை தொடர்பில் பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது. மனித உரிமைகளுக்கான பிரிட்டன் அமைச்சர் அஹமட் பிரபு இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான தொலைபேசி உரையாடலின் போது இது குறித்து தனது கரிசனையை வெளியிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.